# வெற்றிடம்

# இலங்கை மருத்துவப் பேரவை
# நிர்வாக அதிகாரி பதவி

**இலங்கை மருத்துவப் பேரவையில் நிலவும் நிர்வாக அதிகாரி பதவியை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.**

**நிர்வாக அதிகாரி - JM-1-1- ''கனிஷ்ட முகாமையாளர்'' சேவை வகுதி - 01 பதவி**

**தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் அரச முகாமைத்துவம், அரச நிர்வாகம், மனிதவள முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம் எனும் ஏதாவது ஒரு துறையில் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 03 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் அல்லது கடந்த 03 வருடங்களில் நிர்வாகம் அல்லது மனிதவள முகாமைத்துவத் துறையில் நிர்வாக அமைப்பில் அங்கத்துவம்.

(இ) கணனி ஆற்றல் மற்றும் ERP முறைமை, தொழிலாளர் சட்டம் மற்றும் நிர்வாக சுற்றுநிருபத்தில் சிறந்த அறிவாற்றல்.

(ஈ) சிறந்த தொடர்பாடல் மற்றும் ஆளுமை திறன் சகிதம் ஆங்கிலத்தில் மிகச் சிறந்த பரிச்சயம் மற்றும் தமிழ் / சிங்கள மொழிகள் கட்டாயமாகும்.

ஏற்கனவே இலங்கை மருத்துவ பேரவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் மேற்கூறிய அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவத்தைப் பெற்றிருந்தால் அவர்களும் விண்ணப்பிப்பதற்கான தகுதியைப் பெறுவர்.

**சம்பளம்: JM 1-1 ரூபா 42,600 - 10x755 - 18x1,135 = 70,580.00**

- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி என்பன வழங்கப்படும்.

**வயது:**
ஏற்புடைய அரச சுற்றறிக்கையின் அடிப்படையில்.

**சகல விண்ணப்பதாரிகளும்**

- இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- பதவிக்குரித்தான கடமைகளை செய்வதற்குத் தேவையான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

**தொடர்புடைய பதவிக்கான பொது நிபந்தனைகள்**

- இந்தப் பதவி நிரந்தரமானது.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையவராவார்.
- அரசாங்கக் கூட்டுத்தாபனம் / நியதிகள் சபையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உறவினரல்லாத இரு சான்றுபகர்வோரின் பெயர்கள் மற்றும் முகவரிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பம் முடிவுறுத்தப்படும் நாளில் விண்ணப்பதாரர்கள் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**பணி விபரங்கள்**

நிர்வாக மற்றும் முகாமைத்துவ உதவிகளை வழங்குதல் மற்றும் பதிவாளரின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை மருத்துவப் பேரவையின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகவிருத்தல்.

**விண்ணப்பிக்கும் முறை:**

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் கல்வி, தொழில்சார் தகைமைகள், அனுபவம் மற்றும் ஏனைய தொழில்சார் தகவல்களுடனான சுயதரவைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது admin@slmc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2025-03-24ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய, தெளிவற்ற மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்,**
**இலங்கை மருத்துவப் பேரவை,**
**இல. 31, நொரிஸ் கெனல் வீதி,**
**கொழும்பு-10.**
**2025-03-09.**